**செ.வெ.எண்-36** **நாள்-20.10.2019**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், விளந்தை கிராமத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விளந்தை அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1 அரசு கல்லூரி மாணவர் விடுதி, 1 அரசு ஐடிஐ மாணவர் விடுதி, 8 அரசு பள்ளி மாணவர் விடுதி, 6 அரசு பள்ளி மாணவியர் என ஆகமொத்தம் 16 விடுதிகள் இயங்கி வருகிறது. இதில் 165 கல்லூரி மாணவர்களும், 50 ஐடிஐ மாணவர்களும், 756 பள்ளி மாணவர்களும், 351 மாணவியர்களும் உள்ளனர்.

மேலும், விளந்தை கிராமத்தில் உள்ள அரசு பள்ளி மாணவர் விடுதியில் தரமான உணவுகள் வழங்கப்படுகிறதா என்பதை மாணவர்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. விடுதியை சுற்று சுற்றுச்சுவர் அமைக்க கோரிக்கை வைத்துள்ளனர். இக்கோரியினை ஏற்று பரிசீலனைக்கப்பட்டு, சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிச்சாமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**